**O.S.No. 52/2021**

வா.சா.01, திருமதி. அன்புக்கரசி
நாள் : 06.02.2025 நேரம் : 12.02 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1)எங்களுக்கு கிரையம் கொடுத்த சண்முகவள்ளி, பாண்டியம்மாள், பஞ்சம்மாள், நாகவள்ளியிடம் கிரையம் பெற்ற அசல் கிரைய பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. ஏன் இந்த வழக்கில் மேற்படி அசல் கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் 21.10.2010ம் தேதியிட்ட கிரைய ஆவண எண். 1661/2010 பாண்டியம்மாள், பஞ்சம்மாள், நாகவள்ளி ஆகியோர்களிடம் சண்முகவள்ளி வாங்கிய கிரைய ஆவணம் என்றால் எனக்கு படிக்க தெரியாது. மேற்படி மூன்று நபர்களிடம் தான் சண்முகவள்ளி கிரையம் பெற்றார் என்றால் சரிதான். இதனுடைய அசல் கிரைய ஆவணம் எனது வீட்டில் உள்ளது என்றால் சரிதான்.

2)நான் சண்முகவள்ளிடம் இருந்து கிரையம் வாங்கிய 20x20 = 400 சதுர அடி என்றால் சரிதான். இந்த தாவா சொத்திற்கு வடக்கே முனியாண்டியும், தெற்கே வெள்ளையம்மாளும், மேற்கே சண்முகவள்ளி கைவசம் உள்ள இடம் மற்றும் கிழக்கே செல்லம்மாள் இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நான்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின் அடிப்படையில் சண்முகவள்ளிக்கு பாத்தியப்பட்ட இடத்தை தான் நாங்கள் கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். இந்த ஆவணத்தின் அடிப்படையில் தான் எனது கணவர் சண்முகவள்ளியிடம் கிரையம் பெற்றார் என்றாலும், கிரையம் பெற்றதன் அடிப்படையில் எனக்கு இனாம் செட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3)இந்த இனாம் செட்டில்மென்ட்டில் கண்ட நான்கு மால்களுக்குட்பட்ட அளவுகளின் படி கல் ஊன்றி முள் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கிழக்கு பக்கமாக வாசல் உள்ளது என்றால் சரிதான்.

வாசலை ஒட்டி தான் தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான். அதே போல் எனது வீட்டிற்கு வட பகுதியில் கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரதிவாதி எனக்கு எந்தவிதமான தொந்தரவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கல் ஊன்றி அனுபவித்து வரும் இடத்தையோ அல்லது குடியிருந்து வரும் வீட்டிலேயோ பிரதிவாதி அவருக்கு பாத்தியம் இருப்பதாக எந்த விதத்திலும் தொந்தரவு செய்தாரா என்றால் இல்லை, பொது தெருவை உபயோகிக்க கூடாது என்று தொந்தரவு செய்து வருகிறார்.

4)எனது வீட்டிற்கு வட பகுதியில் உள்ள கிழமேல் ரோட்டில் உள்ள பாதையில் பிரதிவாதி தொந்தரவு செய்தாரா அல்லது எனது வீட்டிற்கு கீழ் பகுதியில் உள்ள தென்வடல் ரோட்டில் உள்ள பாதையில் பிரதிவாதி தொந்தரவு செய்தாரா என்றால் மேற்படி இரண்டு தெருக்களிலும் எனக்கு எந்த தொந்தரவு இல்லை, எனது வீட்டிற்கு அருகே தெற்கே செல்லும் பாதையில் தான் தொந்தரவு செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய தற்போது குடியிருந்து வரும் இடத்திற்கு தெற்கே வெள்ளையம்மாளுக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எங்களுக்கு எந்தவிதமான பாத்தியமும் இல்லை என்றால் சரிதான்.

5)எனக்கு பாதை உள்ளது போல் பிரதிவாதிக்கும் தென்வடல் ரோடு உள்ளது என்று சொன்னால் சரிதான். எனக்கும், பிரதிவாதிக்கும் எங்களுக்கு கிழக்கு பக்கம் உள்ள தென்வடல் ரோட்டில் இருவரும் புழங்குவதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை பாதைக்காக போட்டுள்ளேன். பிராதில் பாதையின் அளவை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் கிரையம் வாங்கி வீடு கட்டிய பிறகு பிரதிவாதி கிரையம் வாங்கினாரா என்றால் நாங்கள் இருவரும் ஒரே நேரத்தில் தான் அவரவர்களது இடத்தை கிரையம் வாங்கினோம். பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்தில் ஏற்கனவே பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த வெள்ளையம்மாள் பயீர் செய்து அனுபவம் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

6)நாங்கள் இடம் வாங்கியதிலிருந்தே பிரச்சனை தொடங்கிவிட்டது. முதன்முதலாக மின் இணைப்பு பெறுவதில் இருந்து பிரச்சனை தொடங்கிவிட்டது. மின்சார வயர் பிரதிவாதிகளின் இடத்திற்குள் செல்வதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் இல்லை, மின்சார வயர் பொது பாதையின் வழியாகத்தான் வருகிறது. அந்த பிரச்சனை சம்மந்தமாக எங்களுக்குள் பஞ்சாயத்தார்கள் மற்றும் காவல் நிலையத்தில் ஏற்பட்ட முடிவின் படி ரோட்டில் பிரதிவாதியின் இடத்தின் மேல் சென்றதை அப்புறப்படுத்தி கீழ்புறம் உள்ள தென்வடல் ரோட்டை ஒட்டி மின் இணைப்பு பெறப்பட்டு, அந்த பிரச்சனை சரிசெய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வைக்கோல் படப்பு வைத்ததால் தீப்பிடித்துவிடும் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான்.

7)எங்களுக்குள் மின் இணைப்பு சம்மந்தமாகவும், வைக்கோல் படப்பு சம்மந்தமாகவும் தவிர வேறு எதுவும் பிரச்சனைகள் இல்லை என்று சொன்னால் சரிதான். ஒவ்வொரு பிரச்சனையிலும் ஊரில் உள்ள நபர்களும், கிராம ஊராட்சி தலைவர்கள் உட்பட சமரசம் பேசினார்கள் என்றால் சரிதான். சமரச பேச்சுவார்த்தையில் நாங்கள் ஒத்து போகவில்லை என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தார்கள் எங்களுக்கு விரோதமாக எதுவும் பேசவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திலும் எங்களுக்கு விரோதமாக எதுவும் பேசவில்லை என்றால் சரிதான், பொதுஇடத்தில் வைக்கோல் படப்பு வைக்க கூடாது என்று கூறினார்கள். எனது வீட்டிற்கு அருகே நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். பக்கத்து வீட்டுக்காரர்கள் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பொது இடத்தில் வைக்கோல் படப்பு வைக்காததால் தான் மற்ற நபர்கள் தொந்தரவு செய்ததாக ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வைக்கோல் படப்பை அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. பொது இடம் என்பதே கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

8)சண்முகவள்ளி கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் நான்குமால்களும்,

சண்முகவள்ளியிடமிருந்து எனது கணவர் கிரையம் பெற்ற நான்குமால்களும் மாறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் சண்முகவள்ளியிடம் கிரையம் பெற்ற சொத்தின் நான்கு மால்கள் பத்திரத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் வாங்கிய கிரைய பத்திரத்தில் வடக்கே முனியாண்டி, தெற்கே வெள்ளையம்மாள், கிழக்கே செல்லம்மாள் மற்றும் மேற்கே சண்முகவள்ளி கைவசம் இடம் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது கணவர் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தின் நான்கு மாலிலும், சண்முகவள்ளி கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தின் நான்கு மாலிலும் தெற்கே வெள்ளையம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், நான் கூறுவது போல் பொது பாதையாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அதனால் தான் நான் எனது கணவர் வாங்கிய கிரைய பத்திரத்தையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9)மேற்படி இரண்டு பத்திரத்திலும் உள்ள நான்கு மால்களை மறைத்து தான் எனது கணவர் இந்த பிரச்சனைக்கு பிறகு வழக்கு தாக்கல் செய்யும் சில நாட்களுக்கு முன்பு எனது பெயரில் இனாம் செட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது இனாம் செட்டில்மென்ட் பத்திரத்தில் தெற்கே சர்வே எண். 429/3 ல் கண்ட கிழமேல் தெரு இருப்பதாக ஏற்கனவே எனது கணவரால் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்திலும், சண்முகவள்ளி கிரையம் பெற்ற கிரைய பத்திரத்திலும் மறைத்து தற்போது எனக்கு எழுதி கொடுத்துள்ள செட்டில்மென்ட் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான்குமால்களை திருத்தம் செய்வதற்காக மட்டுமே எனது பெயரில் செட்டில் மென்ட் பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இனாம் பத்திரத்தில் கண்டதின்படி தெற்கே பாதை ஒரு போதும் இருந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

10)வருவாய் ஆவணங்களிலும் தெற்கே பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த பத்திரத்தை தொடர்ந்து கிராம நிர்வாக அலுவலரிடம் தவறாக தெற்கே பாதை இருப்பதாக ஆவணத்தை

உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புலப்பட வரைபடத்தில் பாதை இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. புலப்பட வரைபடத்திலும், மற்ற வருவாய் ஆவணங்களிலும் சண்முகவள்ளி மற்றும் எனது கணவர் வாங்கிய கிரைய பத்திரங்களிலும், தென்பகுதியில் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்த வெள்ளையம்மாள் பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, அதனால் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பாதை இருப்பதாக ஆவணத்தை உற்பத்தி செய்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் உண்மைதன்மை தெரிந்துவிடும் என்பதால் தான் சண்முகவள்ளி கிரையம் வாங்கிய பத்திரத்தையும், எனது கணவர் கிரையம் வாங்கிய பத்திரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.52 P.M

சாட்சியின் கையொப்பம்.